RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s124

OPEN ACCESS

# மானிடவியல் நோக்கில் புறநானூறு காட்டும் சடங்கும் நம்பிக்கையும்

**இ. செந்தாமரை** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பார்வதீஸ் கலை அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்-624002, தமிழ்நாடு, இந்தியா

# From an anthropological point of view, the ritual and faith shown by the Purananuru

**I. Senthamarai** [a, *]

[a] Department of Tamil, Parvathys Arts and Science College, Dindigul-624002, Tamil Nadu, India.

* Corresponding Author: senthamaraiinbasenthu@gmail.com

Received: 04-11-2020
Revised: 08-06-2021
Accepted: 11-06-2021
Published: 16-06-2021

**ABSTRACT**

Human life is a circular ritual of birth, flower and death associated with the flow of time. The rituals of Tamils depend on socio-economic, religious, political and artistic platforms. Rituals vary by presenting the time, place, environment, need and purpose of which they are performed. Man performed rituals to protect himself from a natural calamity. This article seeks to explain the rituals from birth to death of man on the basis of cultural anthropology.

**Keywords:** Anthropology, Rituals, Environment, Purananuru.

## முன்னுரை

மானிட வாழ்வானது கால ஓட்டத்தோடு இணைந்த பிறப்பு, பூப்பு, இறப்பு என்ற வாழ்க்கை வட்டச் சடங்குகளாக அமைகின்றது. தமிழரின் சடங்குகள் சமூகப் பொருளாதார, சமய, அரசியல், கலை ஆகிய தளங்களைச் சார்ந்தே நடைபெறுகின்றன. சடங்குகள் அவை நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்றவற்றை முன்வைத்து அவற்றின் தன்மைகள் வேறுபடுகின்றன. இயற்கைச் சீற்ற நிகழ்விலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள மனிதன் சடங்குகளை நிகழ்த்தினான். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகளைப் புறநானூறு கொண்டு பண்பாட்டு மானிடவியல் அடிப்படையில் இக்கட்டுரை விளக்கமுற்படுகிறது.

## மானிடவியல் அறிமுகம்

மனிதனைப் பற்றிய அறிவியல் “மானிடவியல்”, ஆங்கிலத்தில் இதனை “Anthropology” என்பர். இச்சொல் ‘Anthropos’, ‘logos’ என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. கிரேக்கத்தில் இச்சொற்கள் மனிதன் அறிவியல் என்னும் பொருளைச் சுட்டுகின்றன.

மானிடவியலாளர் என்னும் பொருளுடைய “anthropoligist” என்ற சொல்லை முதன்முதலில் ‘அரிஸ்டாட்டில்’ பயன்படுத்தினார்; எவனொருவன் அவனைப் பற்றிப் பேசுகிறானோ அவனே மானிடவியலாளர் என்ற பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்தினார் அவர். இமானுவேல் காண்ட் கி.பி 1789-இல் “anthropology” என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அந்நூலில் மனிதனின்

தோற்றத்தைப் பற்றி காண்ட் விளக்கியுள்ளார். ஆனால், அவர்களுக்கு முன்னரே கி.பி 1655-இல் ஆசிரியர் பெயர் குறிப்பிடாமல் "Anthropologic-Abstracted" என்னும் தலைப்பில் ஒரு நூல் வெளியாகியுள்ளது. அந்நூல் மானிடவியலை மனித ஆன்மாவின் வரலாற்றை ஆராயும் துறை என்றும், மனித உடற்கூற்றியலை ஆராயும் துறை என்றும் கூறுகிறது.

## மானிடவியலின் தந்தை

18-ஆம் நூற்றாண்டை மானிடவியலின் தொடக்க காலம் என்பர். இந்நூற்றாண்டில் ஜெருமானிய தத்துவவியலாளர் ஜே.ஜே ஹெர்டர் "மனித வரலாற்றைப் பற்றிய தத்துவத்தின் கருத்துகள்" என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அந்நூலில் ஹெர்டர் உலகத்தின் தோற்றம் குறித்தும் மனிதனின் தோற்றம் குறித்தும் மனிதனோடு தொடர்புடைய பிற கருத்துகள் குறித்தும் விவரிக்கிறார். ஒவ்வொரு குறிப்பிட்ட மக்களினத்தவரும் மன அளவில் தனிப்பட்டவர்களாக உள்ளனர். அப்பண்புகள் மரபுவழியில் செல்லக்கூடியவை என்றும் அவ்வினத்தவரின் தனிப்பட்ட பண்புகள் அவர்களின் வரலாற்றுக் கால நிகழ்ச்சியோடு காணக்கூடியவையாக உள்ளன என்றும் ஹெர்டர் நம்பினார். இவ்வகையான முறையில் முதலில் சிந்தித்த அறிஞர் தாம்சன் என்று ஹெர்டர் கருதினார். எனவே ஹெர்டரை மானிடவியலின்தந்தை எனலாம்.

## இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி

இந்தியாவில் மானிடவியலின் தோற்றம் வங்க ஆசியக் கழகத்தோடு தொடர்புடையது. இக்கழகம் கி.பி 1774-இல் சர்வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. "இலக்கிய மானிடவியலின் தந்தை சரத்சந்திரராய்". மானிடவியலாளருள் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் சரத் சந்திரராயும், எல்.கே.அனந்த கிருஸ்ணஐயர். வடஇந்திய மானிடவியலை வளர்த்த பெருமைக்குரியவர் சரத் சந்திரராய் தென்னிந்திய மானிடவியலை எல்.கே. அனந்தகிருஸ்ண ஐயர் வளர்த்தார். இந்திய மானிடவியலில் தனிப்புகழுடன் விளங்கும் "இந்தியாவின் மனிதன்" என்னும் முத்திங்கள் ஆய்விதழை 1921 இல் நிறுவிய பெருமை சரத் சந்திர ராய் அவர்களையே சாரும்.

## மானிடவியலின் உட்பிரிவுகள்

மானிடவியலாளர் அவரவர் விருப்பத்திற்கேற்ப ஒரு குறிப்பிட்ட பரப்பை மட்டும் முதன்மையாக எடுத்துக்கொள்கின்றனர் சிலர்மனிதனின் உயிரியலை ஆராய்வதில் ஈடுபடுகின்றனர், சிலர் மனிதனின் பண்பாட்டை ஆராய்வதில்ஈடுபடுகின்றனர், வேறு சிலர் மனிதனின் முன்வரலாற்றுக் காலத்தை ஆராய்வதில் ஈடுபடுகின்றனர். இதனடிப்படையில் மானிடவியலானது பின்வரும் நான்கு முதன்மையான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவையே,

1. உடல்சார் மானிடவியல்
2. பண்பாட்டு மானிடவியல்
3. தொல்லியல்
4. மொழியியல் (Bhagwatsala Bharathi, 2019)

## பண்பாட்டு மானிடவியல்

பண்பாடு என்பது மனிதனின் உடல்சாராத தகவமைப்பு. 'பண்பாடு' என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுசூழல். இதில் பொருள்சாராப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும்.

"பண்பாடு என்பது அனைவராலும் சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும்."

எர்வர்ட் பர்னர் டைலர் “ஆவி வழிபாடே மனித குலத்தின் தொடக்கச் சமயமாகும் என்னும் கொள்கையை வகுத்தவர்.

## சேய்வழி அழைத்தல்

சேய்வழி அழைத்தல் முறையானது தாய்வழிச் சமூக முறையின் எச்சமாகும். பண்டைக்காலத்தில் தாய்வழிச் சமூக முறை பரவலாக ஓங்கியிருந்தது. புறநானூற்றுப் பாடலில்

“சிறுவர் தாயே பேரிற்பெண்டே” (புறம் 270)

“ஆதன் தந்தை” (புறம் 67)

“வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்” (புறம் 277)

சேய்வழி அழைத்தல் இடம் பெற்றுள்ளது.

## தொத்து மந்திரச்சடங்குமுறை

“குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி”(புறம் 62)

பேய் மகளிர் போர்க்களத்தில் மடிந்த வீரர்களின் புண்களைத் தோண்டிக் குருதி படர்ந்த செங்கையினால் தமது மயிரைக் கோதிடுவர். அப்பேய் மகளிர் முழங்குகிற மெல்லிய ஓசையையுடைய பறையின் தாளத்திற் கேற்ப ஆடுவர் (சிவசுப்பிரமணியன், 2016). இவ்வாறுபேய்ப் பெண்டிர் செய்யும் போர் குறிப்பிடத்தக்கதாகும். போரில் இறக்கும் வீரர்களின் புண்ணைத் தோண்டி தனது மயிரால் அதனைத் தடவுவதால் அவர்களின் சக்தி தன்னைச் சேரும் என்பது நம்பிக்கை. “ஒன்றினைக் கொண்டு அதன் மூலசக்தியை அழிப்பது அல்லது ஆக்கம் செய்வது இதனையே தொத்து மந்திரச்சடங்கு என்றும் கூறுவர். பேய் மகளிரும் இந்த முறையையே பயன்படுத்தி உள்ளனர்” (Sivasubramanian, 2016).

## போர் குறித்த நம்பிக்கைகள்

பண்பாட்டு மானிடவியல் அறிஞர்கள் போர் என்ற பண்பாட்டு அமைப்பு நிலைபேறு அடைந்ததற்கு காரணம், அது தொடர்பான நம்பிக்கைகளே எனக் குறிப்பிடுகிறார்கள். அதாவது நம்பிக்கைகள் தான் வீரர்களை ஊக்குவித்துப் போரில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு உதவுகின்றன. இத்தகைய நம்பிக்கையும். நம்பிக்கை சார்ந்த சடங்குகளும் இல்லையென்றால் போர் என்ற அமைப்பு காலங்காலமாகத் தொடர்வதற்கு இயலாது என மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

“மாசுஇல் மகளிர் மன்றல் நன்றும்,

உயர்நிலை உலகத்து நுகர்ப: அதனால்” (புறம் 287)

போர்க்களத்தில் வீர மரணமடைந்தால் சொர்க்க உலகத்தில் மாசு இல்லாத தெய்வ மகளிரொடு மணம் புரியலாம் என்ற நம்பிக்கை சங்ககாலத்தில் மக்களிடையே பெரும் வழக்கில் இருந்து வந்துள்ளது.

## போர் முரசு

சங்க காலத்தில் போர் முரசு குறித்த நம்பிக்கையும், நிலைப்பாடும் இருந்து வந்துள்ளது.

“மண்கொள வரிந்த வைந்துதி மருப்பின்

அண்ணல் நல்ஏறு இரண்டு உடன் மடுத்து,

வென்றதன்பச்சை சீவாது போர்த்த........” (புறம் 288)

காளை, மண்ணைக் குத்துவதால் உண்டான கோடுகளோடு கூடிய கூரிய கொம்புகளை உடையது. இவற்றில் பெருமைமிக்க நல்ல ஆனேறு இரண்டினைத் தம்முள் சண்டையிடச்செய்வர். அவற்றில் வென்ற காளையினுடைய தோலை மயிர்; சீவாது போர்த்தி உறுதியாய்க் கட்டப்பட்ட போர் முரசைச் செய்வர். இத்தகைய முரசு போர்க்களத்தில் நடுவில் வைக்கப்பட்டு ஒலி எழுப்பப்படும். இவ்வொலி போர்க்கான வெற்றியை உறுதிப்படுத்தும்.

## நடுகல்

இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும். இறந்தவர்கள் நாட்டிற்காக உயிரை விட்டிருந்தால் அவர்களின் வீரத்தைப் பறைசாற்றும் வகையில் அவர்களுக்கு "நடுகல்" வைக்கப்பட்டு அவர்களை வணங்குகின்றனர்.

பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு இமயத்துக்கல் கொணர்ந்து படிவம் சமைத்துத் தெய்வமாக வணங்கிய நிகழ்வையும் இங்கே சான்றாகக் கூறலாம்.

இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் முறையினைத் தொல்காப்பியர்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தல்" (தொல், பொருள் 1006)

எனக் குறிப்பிடுகின்றார்.

நடுகல் எடுப்பதற்கான கல்லைத் தேர்ந்தெடுத்து நடுதற்குரிய நன்நிமித்தம் பார்த்துப் பின்னர், கல்லை நீராட்டி இறந்த இடத்திலோ, பிறந்த இடத்திலோ நட்டு வீரனின் பீடும் பெயரும் எழுதி அக்கல்லைத் தொழுதனர் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

புறநானூற்றுப் பாடலில் பல இடங்களில் நடுகல் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது.

"பிடிஅடி அன்ன சிறுவழி மெழுகி

தன் அமர் காதல் புல்மேல் வைத்த

இன்சிறு பிண்டம்யாங்கு உண்டனை கொல்

உலகு புகுத் திறந்த வாயில்..." (புறம் 234)

கணவன் இறந்தபின் அவனது நடுகல்லிற்கு மனைவி பிண்டம் வைத்து வணங்கப்படும் முறை இருந்தது போரில் உயிர்த்தியாகம் செய்த படைவீரகளுக்கு நடுகல் நட்டுத் தெய்வமாக வணங்கினர்.

## போர்க்கான உளவியல்

போர் என்பது பாலியல் பொறாமையால் உண்டானது. ஒரு நாட்டு அரசன் தன் மகளைப் பிற நாட்டு மன்னன் திருமணம் புரியக் கேட்டு சம்மதிக்காவிடில் போர் அங்கே நடைபெறுகிறது. இது பெண்ணை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது.

நிலத்தைக் கைப்பற்றுவதற்காக நிலப்பரப்பினை விரிவுபடுத்துவதற்காகப் மற்றொரு நாட்டின் மீது போர் மேற்கொள்ளப்படுகிறது. இந்த முறையும் பாலியல் பொறாமையால் உருவானதே, மானிடவியலாளர் நிலத்தைப் பெண்ணாகக் கருதுகிறார்கள். ஒரு நாட்டிலுள்ள காவல் மரம் ஆண்மைக் குறியீடாகக் காணப்படுகிறது. ஒரு நிலத்தைக் கைப்பற்ற எண்ணுபவர்கள் அந்நாட்டிலுள்ள காவல்மரத்தை அழிக்கின்றனர். ஏனெனில் தனது ஆண்மையை உறுதி செய்யும் குறியீட்டுச் செயலாகக் காவல் மரத்தை அழிக்கும் செயல் நிகழ்த்தப்படுகிறது.

"கடுங் கண்ண கொல் கயிற்றால்

காப்பு உடைய எழு முருக்கி" (புறம் 14)

இரும்பால் செய்யப்பட்ட அழகிய அங்குசத்தை உடைய யானை கொல்லும் தன்மையுடையது. இது காவலுடைய கணைய மரத்தை முறித்தது. சங்க காலத்தில் காவல் மரத்தை அழித்தால் அந்த நாட்டையே அழித்ததற்குச் சமம் ஆகும.; அதுவும் பாலியல் பொறாமையால் உருவாக்கப்பட்டதேயாகும்.

நிலம் - பெண்

காவல் மரம் - ஆண்

போர் தொடர்பான உளச்செயல்கள் குறித்து மானிடவியல் அறிஞர்கள், ஓர் ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண்கள் உடல் மீது செலுத்துகின்ற வன்முறையின் குறியீடாக நினைத்து தன் நிலத்தின் மீது அரசர்கள் வன்முறையைச் செலுத்துகின்றனர்.

## பேறுகாலத் தனிமை:

"பேறுகாலத் தனிமை என்பது மனைவி குழந்தை பெறும் இறுதி நாட்களில் அவள்படும் அவதியில் கணவனும் பங்கேற்பதாகும். கணவன் அனைத்து வேலைகளையும் விட்டொழித்து மனைவி அருகிலேயே தனிமைப்பட்டுக் கொண்டும், மனைவி போன்றே குறைந்த உணவு உட்கொண்டும், அதிலும் பிரசவத்திற்கேற்ற சுவை மாறுபட்ட உணவை உட்கொண்டும், மனைவிக்கு ஏற்படும் உடல் வலி தனக்கும் ஏற்படுவது போல் பாவனை செய்து கொண்டும், முடங்கிக் கொண்டும் இருப்பதே பேறுகாலத்தனிமை எனப்படும்" (Bhagwatsala Bharathi, 2012).

"சாறுதலைக் கொண்டென, பெண்ஈற்று உற்றென" (புறம் 82)

மகப்பேறில் உள்ள தன் மனைவிக்கு உதவச்செல்லகட்டில் பின்னும் இழிசினன் கை வேகமாகச் செயல்படும். பிரசவ காலத்தில் தன் மனைவியோடு இருக்க வேண்டும் என்ற எண்ணம் இழிசினனுக்குத் தோன்றியுள்ளது. இப்பாடலில் "பேறுகாலத்தனிமை" இடம் பெற்றுள்ளது.

## தமிழர் உணவு

பண்டைத் தமிழர்கள் உணவை உணா, வல்சி, உண்டி, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உறை, ஊட்டம் எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர். விழாக்களின் போதும், விசேட நாட்களின் போதும் பலவகையான பதார்த்தங்களோடு செய்யப்படும் பேருண்டி என்பதும் வழக்கிலிருந்துள்ளது. கொண்டி, புகா, மிசை என்னும் பெயர்களாலும் உணவு சுட்டப்பெற்றுள்ளது|.

மனிதச் சமூகத்தின் அன்றாட அத்தியாவசியமான உணவு, உடை, மற்றும் இருப்பிடம் மூன்றும் இன்றியமையாதது. சங்க கால அரசர்கள் தன்னைத் தேடிவரும் புலவர்களின் வறுமை நிலையை உணர்ந்து அவர்களது பசியைப் போக்கி வீட்டிற்குக் கொடை பொருள்களையும் வழங்குவர். அவ்வாறு வழங்கும் புலவர்களின் வயிறையும் மனதையும் நிரப்பும் பண்புடையவர்களாகப் புரவலர்கள் திகழ்ந்துள்ளனர். இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று உணவின் முக்கியத்தை நமக்கு பறைசாற்றுகிறது.

## அடிசில்

உணவினைப் புறநானூற்றில் "அடிசில்" என்று வழங்குகின்றனர்.

"சுவைக்கு இனிது ஆகிய குய்யுடை அடிசில்" (புறம் 127)

"குய்கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்" (புறம் 160)

"நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்" (புறம் 188)

“சமுதாயத் திட்டத்தில் ஒருபுறம் கிழார்கள், அவர்களுக்குக் கீழே எண்ணற்ற உழவர்கள் நிறைய இருந்தனர். இவர்கள் ஏறத்தாழ வீட்டு அடிமை முறைக்கும் பக்கத்திலேயே நிற்கின்றனர்” (Maadhaiyan, 2010).

“கொண்டைக் கூழைத் தன் தலைக் கடைசியர் (புறம் 61)

தாளம்பு என்னும் கருவியால் வயல்வெளிகளைச் செப்பம் செய்யும் போது வாளைமீன் துண்டிக்கப்படும். இங்கே உழவுத் தொழில் செய்யும் பெண்கள் கடைசியர் என அழைக்கப்பட்டனர். “குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்” (புறம் 250)

## நெய் கொண்ட சமைத்த உணவு

உடல் உணவின்மையால் வாடி, வதங்கி ஒடுங்கிப் போன குடல் நிரம்புமாறு குளிர்ந்தும். தசையும் நெய்யும் சேர்ந்து தாளித்த உணவினை வழங்கினான் குமணன்.

“நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்” (புறம் 188)

சிறிய அடிகளை எடுத்து வைத்து சின்னக் கைகளை நீட்டி கலத்தில் இட்டும், தொட்டும், கவ்வியும், பிசைந்து நெய்விட்ட உணவை உடம்பில் சிதறியும் குழந்தைகள் உண்ணும்.

“நெய்யில்லா உண்டி பாழ்” என்ற வரிக்கேற்ப நெய் உணவில் சுவையை மட்டுமல்ல மூளை, நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களில் மிகவும் பயன்படுகிறது. திருச்சூரில் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் நெய் எத்தனை பழமையடைந்தாலும் நோய்த் தீர்க்கும்.

### ஊண் உணவு

தன்னால் விரும்பி உண்ணப்படும் மான் இறைச்சியை வறுத்தும், பொறித்தும் அரசன் தந்தான்.

“மன்டைய கண்ட மான் வறைக் கருனை” (புறம் 398)

“பசுங்கண் கருனைச் சூட்டொடு மாந்தி” (புறம் 395)

ஆதி காலத்தில் வேட்டையாடி உண்ணும் உணவைத் தீயில் நேரடியாகச் சுட்டு உணவாகக் கொள்வர். வளமான ஊன் இறைச்சியுடன், சுட்டு இறைச்சி கொண்டும் உண்டனர்.

“கொழுந்தடிய சூடி என்கோ?” (புறம் 396)

வளமான கொழுத்த சுட்ட உணவைச் சொல்வேனோ?

“விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப” (புறம் 366)

ஆட்டுக் கடாவை வெட்டி ஊனைச் சுட்டு அவற்றை வேண்டுபவர்க்கு இலையில் குறையாது கொடுக்கும் பண்புடையவன்; அரசன்.

## இறப்புச் சடங்குமுறை

### கைம்பெண்

கணவனை இழந்த பெண்ணிற்கு “கைம்பெண்” என்ற பட்டத்தைக் கொடுத்து தவ வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்கின்றனர். ஏனெனில் ஒரு பெண்ணுக்குக் கணவனுடன் வாழும் நாளே பயனுடைய முழுமையான வாழ்நாளாம். தற்காலத்தில் “விதவை” என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர்.

## கைம்பெண்டிர் மொட்டையடித்தல்

சங்க காலத்தில் ஒரு பெண்ணின் கூந்தலைக் களைவதற்கும், பூச்சூடுவதற்கும் கணவனுக்கு மட்டும் தான் உரிமை உண்டு. முல்லைப் பூ சூடுதல் திருமணமான பெண்ணிற்கான அடையாளம்.

ஆண் தலைமைச் சமுதாயத்தின் நிஜ வாழ்வில் பெண்கள் ஆண்களுடைய ஒடுக்குதல்களின் குறியீடாய் இருக்கும் நிலை சமயம் என்னும் தளத்தில் தலைகீழ் மாற்றம் பெறுகின்றது. திருவிழாக்களிலும், குலதெய்வ வழிபாட்டிலும், வாக்குக் கேட்டலின் போதும் பெண்கள் அருள் பெற்றுச் சாமியாடுவர். நிஜவாழ்வில் வாக்கெடுத்து, படியச் சீவி, சடைபோட்டு இருப்பர். பெண்கள் சாமியாடுதலின் போது தலைவிரி கோலத்துடன் ஆடுதல் என்பது ஆண்களுக்கெதிரான அடக்குதலிருந்து விடுபடுவதாகும்.

“ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர

அவிர் அறல் கடுக்கும் அம் மென்

குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே”. (புறம் 25)

“கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய

கழிகல மகடூஉப் போலப்

புல்லென் றனையால், பல் அணி இழந்தே”. (புறம் 261)

“மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்”. (புறம் 280)

பெண்களை அடக்குதலுக்குரிய ஆண்களின் குறியீடாய் திகழும் கூந்தலைக் கொய்தல் நிகழ்வு, பிற ஆடவனின் உரிமைக்குரியவளாகப் பூச்சூடி ஏற்றுக் கொள்ளும் நிலையைத் தடுப்பதற்கான கூந்தலைக் களைதல் நிகழ்வு புறநானூறு இலக்கிய காலகட்டத்தில் திகழ்ந்து உள்ளது.கணவனை இழந்த பெண் கடுமையான சடங்கு சம்பிரதாயங்களுக்கு உட்படுத்தப்படுகிறாள். உடன்கட்டை ஏறுவதே சிறப்பு என்ற எண்ணத்திற்கு உள்ளாகுகிறாள்.

## முடிவுரை

மானிடவியலானது மனித குலத்தைக் கடந்தகாலம், நிகழ்காலம் என காலந்தொட்டு பரிமாணங்களுடன் எல்லா இடத்து மக்களையும் எக்காலத்து மக்களையும் ஆராயும் தன்மை கொண்டது பண்பாட்டு மானிடவியல். மானிடவியல் நோக்கில் ஆராயும்போது ஆதிகாலம் தாய்வழிச் சமூகமாகவே இருந்துள்ளது. பெண்களுக்குரிய மாதவிலக்கினையும், கர்ப்பவதியாக இருக்கும் பெண்ணையும் பார்த்து மனிதன் பயந்தான். அதோடு மட்டுமன்றித் தந்தையை அடையாளம் காட்டும் தன்மை தாயிடமே இருந்தது. பின்னர் சொத்துரிமை என்ற நிலைமாறித் தந்தைவழிச் சமுதாயம் உயிர்ப்பெற்றது. மானிடவியல் என்பது மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நிலைப்பாடுகளை ஆராய்வதே ஆகும். போர் என்பது சமூக பண்பாட்டின் வெளிப்பாடு. போர் காதலுக்கு எதிரானது. போரும் காதலும் எதிரானது மனித வாழ்க்கைக்கு. போர் என்பது சடங்குளால் உருவாக்கப்படுகின்ற பண்பாட்டு அமைப்பு ஆகும். பண்பாட்டு மானிடவியல் அறிஞர்கள் போர் என்ற அமைப்பு நிலைப்பேறு அடைந்ததற்குக் காரணம் போர் பற்றிய நம்பிக்கைகளே என்கின்றனர். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வியல் தொடர்புடைய நிகழ்வுகளையும்சடங்குகளைச் செயல்படுத்தி வந்துள்ளனர்.

## References

Baktavatchala Bharathi, (2012) Manudaviyal Kotpaadugal, Second edition, Adaiyalam Publications, Tirchy, India.
Bhagwatsala Bharathi, (2019) Panpattu manidaviyal, Adaiyalam Publications, Tirchy, India.
Maadhaiyan, Pe., (2010) Sanga ilakkiyaththil velaan samuthaayam, New Century Book House, Chennai, India.
Sivasubramanian, A., (2016) Manthiramum Sadangukalum, Kalachuvadu Publications, Chennai.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License